செ.வெ.எண்: 79/ பிப்ரவரி /2020 நாள்: 28.02.2020

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.02.2020) நடைபெற்றது.

---------------

கிசான் கிரெடிட் கார்டு (உழவர் கடன் அட்டை) பெற, நாளை (29.02.2020) சனிக்கிழமை அன்று அனைத்து ஊராட்சி அலுவலகத்திலும், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுலவலர்கள் கலந்து கொள்ளும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

---------------

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டத்தில் பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான கௌரவ ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளின் குடும்பத்திற்கும் ஆண்டிற்கு தலா ரூ.6000/- வீதம் மூன்று தவனைகளில் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,42,672 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும் தற்சமயம் வடுபட்ட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களை அணுகி பயன்பெறலாம்.

பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான ஓய்வூதியத்திட்டம் (PMKMY) மூலம் 18 முதல் 40 வரை வயதுடைய அனைத்து விவசாயிகள் வயதுக்கு தகுந்தவாறு பிரிமியம் தொகையை அருகிலுள்ள பொது சேவை மையங்களில் செலுத்தி பயன்பெறலாம்.

நுண்ணீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகளுக்கு, பாதுகாப்பான குறு வட்டங்களில் குறைந்த மிகுதியான ஆழமுள்ள துளைக் கிணறு, குழாய் கிணறு அமைக்க 50% மானியமும், (அதிகபட்சமாக ரூ.25,000/-) டீசல் பம்செட், மின் மோட்டாருக்கு 50% மானியமும் (அதிகபட்சமாக ரூ.15,000/-), பாசன குழாய்கள் அமைக்க 50% மானியமும் (அதிகபட்சமாக ரூ.10,000/-), தரைநிலை சேகரிப்பு தொட்டி அமைக்க 50% மானியமும், ரூ.350/- க.மீட்டர். ஒரு பயனாளிக்கு ரூ.40,000/- வரையும் வழங்கப்படுகிறது.

கிசான் கிரெடிட் கார்டு (உழவர் கடன் அட்டை) பெற, நாளை (29.02.2020) சனிக்கிழமை அன்று அனைத்து ஊராட்சி அலுவலகத்திலும், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுலவலர்கள் கலந்து கொள்ளும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தில் சேர உரிய ஆதார் நகல், கணினி சிட்டா, வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல் ஆகிய ஆவணங்களுடன் முகாமில் கலந்து கொண்டு விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.

வேளாண்மைப் பொறியியல் துறையில் நில மேம்பாடு மற்றும் உழுவை வாடகைத் திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி கோட்டத்தில் மூன்று மண் தள்ளும் இயந்திரங்கள் மற்றும் 6 உழுவை இயந்திரங்கள் உள்ளது. திருச்சிராப்பள்ளி உபகோட்டத்தில் 3 உழுவை இயந்திரங்களும், 1 மண்தள்ளும் இயந்திரமும், இலால்குடி உபக்கோட்டத்தில் 2 உழுவை இயந்திரங்களும், 1 மண்தள்ளும் இயந்திரமும் உள்ளன.

நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மண்தள்ளும் இயந்திரம் ஒரு மணிக்கு ரூ.840/-க்கு வாடகைக்கு விடப்படுகிறது.

சோலார்பம்ப் அமைக்கும் திட்டத்தில் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் சூரிய சத்தியால் இயங்கும் 5 முதல் 10 குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பம்பு செட்டுகள் ஆர்வமுடைய விவசாயிகளுக்கு 70 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்.

நபார்டு உதவியுடன் 100/- மான்யத்தில் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி மழை பெய்கின்றபோது வேளாண் பெருங்குடி மக்கள் தங்கள் நிலத்தில் வழிந்தோடும் மழை நீரை தாங்கள் நிலத்தில் சேமித்து வைத்திட பண்ணைக்குட்டை அமைக்கும் பணி 100% மான்யத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.தா.சாந்தி, இணை இயக்குநர், வேளாண்மைத்துறை திரு.பி.அசோகன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர்(பொ) திருமதி.பி.விமலா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி.சாந்தி(வேளாண்மை), வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.ஆர்.செந்தில்குமார், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் திருமதி.எஸ்தர்ஷீலா, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திரு.அருளரசு, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி.தனலட்சுமி, தமிழ்நாடு மின்சார பகிர்மான கழகம் கண்காணிப்பு பொறியாளர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்புக் கோட்ட செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி**